# கமாலுதீன் மதனியின் கனிவான கவனத்திற்கு ...

அபூ உஸ்மான், சென்னை 29

அஸ்ஸலாமு அலைக்கும்(வரஹ்....) S.**கமாலுத்தீன் மதனீ அவர்களே!**

நீங்கள் சென்னையில் அரபி படித்து, பின்னர் மதீனா சென்று மேற்படிப்பு படித்து அகீதா என்ற கொள்கை சம்பந்தமான பாடத்தை படித்து மதனீ என்று வலம் வந்து கொண்டிருக்கின்றீர்கள்! அல்லாஹ் சுப்ஹானவதஆலா உங்களுக்கு "இஸ்லாமியக் கொள்கை"யை விளங்கிக் கொள்வதற்காக உங்களுக்குத் தந்த சந்தர்ப்பத்தை 'சரியாக' பயன்படுத்தி, இந்த ஏகத்துவக் கொள்கையை விளங்கி வைத்துள்ளீர்கள். இதற்கு நீங்கள் அல்லாஹ்வுக்கு அதிகமதிகம் நன்றி செளுத்தக் கடமைப்பட்டு இருக்கின்றீர்கள். அதே நேரத்தில், படித்து முடித்த பிறகு, உங்கள் சிந்தனையை தெளிவாக அமைத்துக் கொள்வதற்குப் பதிலாக அப்பாவி முஸ்லிம்களில் ஒரு சிறு கூட்டத்தை உங்களைப் பின்பற்றக் கூடியவர்களாக ஆக்கி விட்டீர்கள் என்பதை நீங்கள் மறுக்க முடியாது. இதையெல்லாம் நீங்கள் விளங்கித்தான் செய்கிறீர்களா? அல்லது வேண்டுமென்றே செய்கிறீர்களா? என்று எனக்கு சந்தேகமாய் இருக்கிறது. காரணம், அல்லாஹ் சுப்ஹான வதஆலா குர்ஆனில் இந்தச் சமுதாயத்தைப் பற்றி குறிப்பிடும் போது, குறிப்பாக முஸ்லிம் சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது,

**"மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள்; (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள்; தீயதை விட்டும் விலக்குகிறீர்கள்; இன்னும் அல்லாஹ்வின் மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள்" என்று சொல்கிறான்.** அல்குர்ஆன் 3:110

இன்று இந்தியாவை பொறுத்தவரை 86.3 சதவிதத்துக்கு மேலாக, முஸ்லிம் இல்லாதவர்கள் இருக்கிறார்கள். 13.7 சதவீதம் பேர்கள் முஸ்லிம்களாக, இருக்கிறார்கள் என்று கணக்கெடுப்பு கூறுகிறது. இந்த நிலையில் 13.7 சதவீதம் பேர்களில், அதாவது 'முஸ்லிம்' என்று தங்களை கூறிக்கொள்பவர்களை நீங்கள் ஏன் சிலரை 'முஸ்லிம் இல்லை' என்று சொல்கிறீர்கள்? இதற்கு குர்ஆன், நீங்கள் படித்த கொள்கை விளக்கம் மூலமாகப் பதில் தர முடியுமா? ஏகத்துவத்தை ஏற்றுக்கொண்டவர்கள் தான் "முஸ்லிம்கள்" என்று குர்ஆன் சொல்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அறியாமல் இருக்கின்ற முஸ்லிம்களைப் பார்த்து முஸ்லிம் இல்லை என்று ஏன் சொல்கிறீர்கள்? ஏகத்துவத்தை உணர்ந்த நீங்கள், அறிந்த நீங்கள் என்ன செய்யவேண்டும்?

நம் சமுதாயம் இன்று ஏகத்துவத்தை ஏற்க மறுக்கிறதே, கப்ரில் போய் தலை வணங்குகிறதே! பெரியார்களை போற்றிப் புகழ்ந்து அவர்களைக் கண்மூடிப் பின்பற்றுகிறதே! இதை எப்படி நம் பிரச்சாரத்தின் மூலமாக களையலாம் என்று சிந்தித்து, அவர்களையும் ஓரிறைக் கொள்கையின் பக்கம் அழைப்பு விடுப்பதற்கு பதிலாக 13.7 சதவீத்தில் குறிப்பிட்ட சில பேர்களை மட்டும் நீங்கள் 'முஸ்லிம்' என்றும் மற்றவர்களை 'காஃபிர்' என்றும் சொல்வதற்கு உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது? உங்களுக்கு யார் இந்த அதிகாரத்தைக் கொடுத்தது?

நீங்கள் இன்று ஏகத்துவக் கொள்கையில் இருக்கிறீர்கள் என்றால், அந்த வல்ல ரஹ்மானின் அருட்கொடை தான் காரணம். உங்களுக்கு கிடைத்த மாதிரி அனைத்து முஸ்லிம்களுக்கும், ஏன் உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று நினைத்து நாம் துஆ செய்து, அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டுமே தவிர, 13.7 சதவீதத்தில் சிலரை, உங்கள் இயக்கத்தை சேர்ந்தவர்களை மட்டும் பிரித்துக்காட்டி மற்றவர்களை ஏன் சமுதாயத்தை விட்டும் பிரித்துப் பார்க்கிறீர்கள்? இந்த அதிகாரம் உங்களுக்கு யார் கொடுத்தது? இது தான் நீங்கள் மதீனாவில் படித்த இலட்சணமா?

குர்ஆனில் சூரத்துல் பகராவில் முனாஃபிக்குகள் பற்றி அல்லாஹ் தெளிவாக ஆயத்தை இறக்கிக் கொடுத்து, நபி(ஸல்) அவர்களுக்கு ‘முனாஃபிக்குகள்’ யார் என்று அறிவித்துக் கொடுக்கிறான் (2:8 20) அப்படி இருந்தும், நபி(ஸல்) அவர்கள் முனாஃபிக்குகள் ஜமாஅத் என்று சொல்லி சிலரை அடையாளம் காட்டி அவர்களையெல்லாம் தங்கள் கூட்டத்தை விட்டும் பிரித்துக் காட்டவில்லை; மாறாக, அவர்களையும் இந்த ஓரிறைக் கொள்கையின் பக்கம் எப்படி அழைப்பது? என்றும், அல்லாஹ்வின் அடியார்களாக எப்படி மாற்றுவது என்றும் சிந்தித்து மிக அழகிய சமுதாயத்தை உருவாக்கினார்கள் என்று நீங்கள் ‘சீரா’(வரலாறு)வில் படிக்கவில்லையா?

நபி(ஸல்) அவர்களை மக்காவில் இருந்து இறை மறுப்பாளர்கள் விரட்டியடித்த போது, போன இடத்தில் ஒரு ‘கஅபா’வை ரசூல்(ஸல்) அவர்கள் கட்டவில்லை. ஆனால், அந்த ‘கஅபா’வை எப்படி இறையில்லமாக மாற்ற முடியும் என்று யோசித்து, அதில் வெற்றியும் கண்டார்கள் என்பதை நீங்கள் உணரவில்லையா?

நீங்கள் எந்த அடிப்படையில் ‘முஸ்லிம்’ என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்கள் ‘முஸ்லிம் இல்லை’ என்று சொல்கிறீர்கள் என்பதை சமுதாயத்துக்கு முன்னால் சொல்ல முடியுமா? அல்லாஹ் இப்படி உங்களுக்குப் பிரிக்கச் சொல்லி அதிகாரம் கொடுத்து உள்ளானா? “ஒன்றுபட்ட சமுதாயம் மலர” என முயற்சி செய்வது என்று நபி(ஸல்) அவர்கள் யோசித்து, அதில் வெற்றியும் பெற்று “முன்மாதிரி சமுதாயத்தை” உருவாக்கிக் காட்டினார்களே இதை நீங்கள் விளங்க வில்லையா? அல்லது நடிக்கின்றீர்களா? அல்லது தெரிந்தும் மறைக்கின்றீர்களா?

மக்கா வெற்றியின் போது, நபி(ஸல்) அவர்கள், எல்லோருக்கும் “பொதுமன்னிப்பு வழங்கி” ஏகத்துவத்தை நிலைநாட்ட பாடுபட்டார்களே! நீங்கள் படித்தது உங்களுக்கு ஞாபகம் வருகிறா? சொர்க்கவாதி யார்? நரகவாதி யார்? என்று உங்களால் இந்த உலகத்தில் சொல்லி விட முடியுமா? உங்கள் சிந்தனைக்காக, நீங்கள் படித்த புத்தகத்தில் இருந்தே ஆதாரத்தைத் தருகிறேன். இதைப் படித்த பிறகாவது, சமுதாயத்தைக் கூறு போடும் உங்கள் கொள்கை இயக்கத்தை கலைத்து விட்டு, தெளிவான சிந்தனையோடு ‘முஸ்லிமீன்’ என்று முஸ்லிம்கள் அனைவரையும் ஒன்றிணைக்க முன்வாருங்கள்.

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(ரழி) அவர்கள் கூறியதாவது: உண்மையே பேசியவரும், உண்மையே அறிவிக்கப்பட்டவருமான அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் எங்களிடம் கூறினார்கள்.

உங்கள் படைப்பு உங்கள் தாயின் வயிற்றில் நாற்பது நாட்களில் ஒருங்கிணைக்கப்படுகிறது. பிறகு அதே போன்ற காலத்தில் (40 நாட்களில் அட்டை LEECH போன்று) ஒரு கருக்கட்டியாக மாறுகிறது. பிறகு, அதே போன்ற காலத்தில் (மெல்லப்பட்ட சக்கை போன்ற) சதைப்பிண்டமாக மாறுகின்றது. பிறகு அல்லாஹ் ஒரு வானவரை (அதனிடம்) அனுப்புகிறான். அந்த வானவருக்கு நான்கு கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. (அவை) அதன் (கருவாக இருக்கும் அந்த மனிதனின்) செயலையும் (அவனுடைய செயல்கள் எப்படி இருக்கும் என்பதையும்) அதன் வாழ்வாதாரத்தையும் (அவனுக்கு என்னென்ன எந்த அளவு கிடைக்கும் என்பதையும்) அதன் வாழ் நாளையும் (அவன் எவ்வளவு நாள் வாழ்வான், எப்போது இறப்பான் என்பதையும்) அது (இறுதிக்கட்டத்தில்) துர்பாக்கியசாலியா, நற்பேறுடையதா என்பதையும் (நான் விதித்தபடி) எழுது என்று அந்த வானவருக்கு கட்டளையிடப்படும். பிறகு அதனுள் உயிர் ஊதப்படும். இதனால்தான், உங்களில் ஒருவர் (நற்) செயல் புரிந்து கொண்டே செல்வார். எந்த அளவிற்கென்றால் அவருக்கும் சொர்க்கத்திற்கும் இடையே ஒரு முழம் (தொலைவு) தான் இருக்கும். அதற்குள் அவரது விதி அவரை முந்திக்கொண்டு விடும். அவர் நரகவாசிகளின் செயலைச் செய்து விடுவார். (அதன் விளைவாக நரகம் புகுந்து விடுவார்). ஒருவர் (தீய) செயல்கள் செய்து கொண்டு செல்வார். எந்த அளவிற்கென்றால் அவருக்கும் நரகத்திற்குமிடையே ஒரேயொரு முழம் (தொலைவு) தான் இருக்கும். அதற்குள் விதி அவரை முந்திக் கொண்டுவிடும். அதனால் அவர் சொர்க்கவாசிகளின் செயலைச் செய்வார். (அதன் காரணத்தால் சொர்க்கம் புகுவார்). புகாரீ 3208, 6493, 6594, மேஸீம் பார்க்க : 6606, 6607)

மேலே உள்ள ஹதீஸைப் படித்துப் பார்த்தீர்களா? இந்த ஹதீஸில், சொர்க்கவாதி யார்? என்றும் நரகவாதி யார்? என்றும் யாராலும் நிர்ணயிக்க முடியாது என்று தெளிவாக, நபி(ஸல்) அவர்கள் அறிவித்து இருக்கும் போது, உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? ஒருவரைப் பார்த்து 'காஃபிர்' என்று சொல்வதற்கு? எங்கிருந்து ஆதாரம் எடுத்தீர்கள்? விளக்க முடியுமா? இந்த உலகத்தில் ஏதோ நான் கேட்கிறேன் என்று அலட்சியப்படுத்தி விட்டு, எப்போதும் போல் உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால், சமுதாயத்தை கூறு போட்டதற்கான கூலியை நீங்கள் அனுபவிக்க வேண்டும் என்று குர்ஆன் ஆயத்தைக் கூறி எச்சரிக்கை செய்கிறேன்.

**இன்னும், நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள்; அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்த நிஃமத்களை (அருள் கொடைகளை) நினைத்துப் பாருங்கள்; நீங்கள் பகைவர்களாய் இருந்தீர்கள்  உங்கள் இதயங்களை அன்பினால் பிணைத்து; அவனது அருளால் நீங்கள் சகோதரர்களாய் ஆகிவிட்டீர்கள்; இன்னும், நீங்கள் (நரக) நெருப்புக் குழியின் கரை மீதிருந்தீர்கள்; அதனின்றும் அவன் உங்களைக் காப்பாற்றினான்  நீங்கள் நேர்வழி பெறும் பொருட்டு அல்லாஹ் இவ்வாறு தன் ஆயத்களை  வசனங்களை உங்களுக்குத் தெளிவாக்குகின்றான்.** அல்குர்ஆன் 3:103

**நிச்சயமாக எவர் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரித்துக் கொண்டும் நீதமின்றி நபிமார்களைக் கொலை செய்து கொண்டும், மனிதர்களிடத்தில் நீதமாக நடக்க வேண்டும் என்று ஏவுவோரையும் கொலை செய்து கொண்டும் இருக்கின்றார்களோ அவர்களுக்கு நோவினை மிக்க வேதனையுண்டு**

**என்று (நபியே!) நீர் நன்மாராயங்கூறுவீராக!** அல்குர்ஆன் 3:21

அல்லாஹ் சொல்வதைக் கேட்காமல், சொந்தமாகச் சட்டம் சொல்லும் சகோதரரே? உங்கள் நன்மைக்காக சொல்கிறேன்; உங்கள் உயிர் உங்களிடம் இருக்கும் முன்பே உண்மையை ஊராருக்குச் சொல்லி தவ்பா செய்து, உண்மையான இஸ்லாம் உலகம் முழுவதும் பரவ முயற்சி செய்யுங்கள். இந்த உலகத்தில் கிடைக்கும் அற்ப பதவி, பணம், மரியாதை இவைகளுக்கு அடிமைப்பட்டு, முஸ்லிம் சமுதாயத்தை பிரித்ததை மக்களிடம் எடுத்துரைத்து விடுங்கள். அப்போது தான் நீங்கள் உண்மையிலேயே இந்த இறைக் கல்வியை படித்ததற்கு அர்த்தம் இருக்க முடியும். அப்படி செய்யாமல் உங்கள் நிலைமையிலேயே தொடர்ந்து நீடிப்பீர்கள் என்றால், உங்களிடம் இந்த விஷயம் எடுத்து வைக்கப்பட்டு விட்டது என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்.

உங்கள் 18 வருட தஃவா பணியில் நீங்கள் சிந்தித்துப் பார்த்தால் .. பல பிரிவுகளை, நீங்களும் உங்கள் ஆரம்ப கால தோழரும் ஏற்படுத்தி விட்டீர்கள் என்பதை மறைக்க முடியாது. ஆரம்பத்தில் நீங்கள் பள்ளிவாசல்களை உங்கள் இயக்கத்துக்காகக் கட்டிய போது, ‘ஏகத்துவத்தை நிலைநாட்ட பள்ளி கட்டுகிறோம்’ என்று சொன்னீர்கள். ஆனால், உங்கள் பழைய நண்பர் பிரிந்து அவர் வேறு ஜமாஅத்தை ஏற்படுத்திய போது, அவரும் பள்ளிவாசல்களைக்கட்டி, இது தவ்ஹீது பள்ளிவாசல், அது ஜாக்ஹ் பள்ளிவாசல் என்று பிரித்தார். நீங்கள் பிரச்சாரம் செய்து, சமுதாயத்தை பிரித்துள்ளீர்கள். தெரிந்தோ தெரியாமலோ! ஆகவே உண்மையை ஒத்துக் கொள்ளுங்கள். மக்கள் மன்றத்தில் பிரிவினையை களைவதற்கு முயற்சி செய்யுங்கள். முஸ்லிம் சமுதாயத்தை ஒன்றுபடுத்த முயற்சி செய்யுங்கள். இது தான் இன்று முதல் பணி. தலையாய தேவையாகவும் இருக்கிறது. முஸ்லிம்களுக்கு எதிரிகள் ஏராளம் உருவாகி விட்டார்கள். ஏனென்றால், முஸ்லிம்கள் தங்கள் ஒரிஜினில் முகத்தைத் தொலைத்து விட்டார்கள். அல்லாஹ்வுடைய, அவன் தூதருடைய வழிகாட்டுதல்கள் மறைக்கப்பட்டு வருகிறது. அதற்கு நீங்களும் ஒரு காரணமாக இருந்து விடாதீர்கள்.

குர்ஆனுக்கு குர்ஆனில் உள்ளபடியே விளக்கம் கொடுங்கள். ஹதீஸுக்கு ஹதீஸில் உள்ளபடியே விளக்கம் கொடுங்கள். நீங்கள் ஒரு விஷயத்தை சொல்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த, விஷயத்துக்கு குர்ஆன் மாறுபடுகிறது என்று ஆகும் போது, உங்கள் கருத்தைக் குப்பை தொட்டியில் போட்டு விட்டு குர்ஆனிய கருத்துக்கு வாருங்கள். எப்படியாவது வளைத்து, திரித்து, ஒடித்து, குர்ஆனுக்கு விளக்கம் கொடுத்து உங்கள் கருத்துக்கு குர்ஆனை ஒத்துப்போகச் செய்து விடாதீர்கள்.

ஜாக்ஹ் என்பதும் தவ்ஹீத் ஜமாஅத் என்பதும், இன்னும் பல பிரிவுகளும் நிர்வாக வசதிக்காக என்று வாதாடினீர்கள். ஆனால், அதுவே ஒரு ஜாதியாக உருவாகும் அளவுக்கு வெறி பிடித்து மக்கள் திரிகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. பெண், மாப்பிள்ளை பேசப்படும் போது, மாப்பிள்ளை ஜாக்ஹா, பொண்ணு தவ்ஹீதா? வேண்டாம்மப்பா! நோன்பு பிரச்சனை இன்னும் மற்ற பிரச்சனை வந்து தலாக்கில் போய் விட்டு விடும் என்று சொல்லும் அளவுக்கு மக்கள் பிரிந்து விட்டார்கள் என்பது கற்பனை அல்ல; உண்மை. நானே எங்கள் வீட்டில் அனுபவித்த விஷயத்தை உங்களுக்குச்

சொல்கிறேன். ஒற்றுமையை வலியுறுத்தியே குர்ஆனும், ஹத்ஸும் பேசுகிறது. வேற்றுமையை வலியுறுத்துபவன் ஷைத்தான் என்பதை நினைத்து, தங்கள் நிலைமையில் இருந்து மாறி ஒன்றுபட்ட “ஜமாஅத்துல் முஸ்லிமீன்”க்கு வாருங்கள். இந்த சமுதாயம் நபி(ஸல்) அவர்கள் காலத்து அந்தஸ்தை அடைய, அல்லாஹ்வுக்காக பணி புரிய முன் வாருங்கள் என அழைக்கின்றோம்.

ஜனவரி 2005 அந்நஜாத்